**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**Ar.O.P.No.18/2021**

**நாள்.07.08.2024**

ம.சா.1 திரு.வரதராஜன் IA No.02/2024 அனுமதிக்கப்ப்டடதன் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் கோரிக்கைதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் சர்வே எண். 202/1B ஆனது 2ம் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டது. அந்த வரைபடம் ம.சா.ஆ.11 ஆகும். என்னுடைய அந்தநிலத்தின் வழியாக மதுரை செல்லும் ECR ரோடு அமைந்துள்ளது. எனது ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் அருகில் முதுநாள் கிராமம் அமைந்துள்ளது. மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் நயினார்கோவிலிற்கு செல்லும் ரோடும் அருகில் உள்ளது. மேற்படி நயினார்கோவில் செல்லும் ரோடானது கிராம பஞ்சாயத்து ரோடாகும்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான ம.சா.ஆ.11 இல் நான் சொல்வது போன்று ரோடு எதுவும் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ரோடு இருந்திருந்தால் அந்த ரோட்டினை தனியாக குறிப்பிட்டிருப்பார்கள், அவ்வாறு ரோடு எதுவும் இல்லை என்பதால்தான் வரைபடத்தில் ரோடு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 ஆனது பழைய ஆவணம் என்றும், அதனால் அதில் காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 202/6 என்றுதான் காட்டப்பட்டுளளது என்றும், நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று 202/1B தனியாக பிரித்து காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சர்வே எண்.

202/1B யிலிருந்து சாலை போவதாக சொல்லப்படும் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 202 ஆனது நஞ்சை நிலம் என்றால் சரிதான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .